# சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சிறுவர் ஊழியம் தொடர்பானஒரு ஆய்வு

**S.M.Ahamed Lebbeand M.F. Fazeela**

Dept.of Social Sciences
South Eastern Unverstiy of Sri Lanka, Oluvil, Sri Lanka

**Keywords:** சிறுவர் ஊழியம், ஊழியச் சுரண்டல்,பாடசாலை இடைவிலகல்

**அறிமுகம்**

சிறுவர்களை வேலைக்கமர்த்துவது கடந்த தசாப்பதங்களாக உலகம் எதிர்நோக்கி வரும் பாரிய பிரச்சினைகளுள் ஒன்றாக காணப்படுகிறது. சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும் நிலையானது வருடாவருடம் அதிகரித்துக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். உலகளாவிய ரீதியில் 246 மில்லியன் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் உலகின் மொத்த சிறுவர்களுள் 17 சதவீதமானவர்களாகும். (சர்வதேச ஊழியர் ஒன்றியம், 2009). 5 வயது முதல் 17 வயதிற்குறப்பட்ட சிறுவர்களே பொதுவாக இவ்வாறு ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒரு நாட்டினது சமூக பொருளாதார, அபிவிருத்திகளின் முன்னேற்றத்திற்கான தடைக்கல்லாகவும் இன்று இப்பிரச்சினை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனும் வாசகத்திற்கிணங்க உலகளாவிய ரீதியில் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்டுவது அதிகமான உடலியல் மற்றும் உளவியல் சார் பிரச்சினைகளை தோற்றுவிப்பதுடன் ஒரு நாட்டினது எதிர்கால பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைவதற்கும் காரணமாக அமைகின்றது.

ஆசியா, பசுபிக் போன்ற கண்டங்களில் 10 சதவீதமான சிறுவர்களும், ஆபிரிக்காவில் 25 சதவீதமான சிறுவர்களும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். ஒப்பீட்டளவில் ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா நாடுகளில் அதிகமான சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். இப்பிரச்சினை உலகில் மட்டுமன்றி இலங்கையிலும் இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் மொத்த சிறுவர்களில் 107,259 அல்லது 2.5 சதவீதமானவர்கள் சிறுவர் ஊழியம் புரிபவர்களாகும் (Department of Census and Statistics, Ministry of Finance and Planning, 2009). (ஊழியர்களில் சர்வதேச ஊழிய ஒன்றியத்தின் (2009) அறிக்கைக்கிணங்க 15 ஆண்டுகளாக சிறுவர்கள் வீட்டு ஊழியத்தில் ஈடுபட்டுவருவதாகவும் அவர்கள் வர்த்தக ரீதியாக சுரண்டப்படுவதாகவும் குறிப்பிடுகின்றது. இலங்கையில் வேலையில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களில் 62 சதவீதமானவர்கள் ஆண்களாகவும் வேலையில ஈடுபடும் மொத்த சிறுவர்களில் 95 சதவீதமானவர்கள் கிராமப்புறங்களை சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். பெண்கள் கூடுதலாக நகரப் புறங்களில் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் (ILO, 2009). இலங்கையில் விவசாயம், கைத்தொழில், சேவை, குடிசைக்கைத்தொழில் மற்றும் சட்ட விரோத பொருட்கள் உற்பத்தி போன்றவற்றில் மாத்திரமன்றி யுத்தம் போன்ற ஆபத்தான துறைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான நோய்களுக்கும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் சம்மாந்துறைப் பிரதேசத்திலும் சிறுவர்களை வேலைக்கமர்த்தப்படும் நிலைமை விதிவிலக்கற்றதொன்றாகவே காணப்படுகின்றது. இங்கு 51 கிராமசேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் 15 க்கும் மேற்பட்ட கிராமசேவகர் பிரிவுகள் வளர்ச்சி அடையாததாக காணப்படுவதால் இப்பிரதேசங்களில் அதிகமான சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். இவை தவிர தமிழ்மக்கள் வாழ்கின்ற 12 கிராம சேவகர்பிரிவுகளில் யுத்தத்தின் தாக்கம் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனால் ஏனைய கிராமசேவகர் பிரிவுளுடன் ஒப்பிடும் போது இத்தகைய கிராம சேவகர் பிரிவுகளில் சிறுவர்கள் வேலைக்குச்செல்லும் நிலையும், யுத்தத்தினால் கல்வியிழந்த நிலையும் மிகைத்துக் காணப்படுகின்றன.

சம்மாந்துறை பிரதேசத்தில் பலசரக்குக்கடை கற்சூழை, ஹோட்டல்,ஈருருளி வாகனங்கள் திருத்துமிடங்கள், சேவிஸ் நிலையங்கள் போன்ற இடங்களில் இத்தகைய சிறுவர்களின்

நிலையை பார்க்கும்போது கவலைக்கிடமாக காணப்படுகின்றது. முதலாளிமார்களினால் அவர்கள் நடாத்தப்படும் முறைகள், அவர்களின் செய்யும் தொடர்தேர்ச்சியான சேவைகள் என்பனவற்றைப் பார்க்கும் போது இழமைப்பருவத்தில் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்ளும் இவர்களின் முயற்சியைப் பாராட்டினாலும் அதற்காக அவர்கள் மேற்கொள்ளும் தியாகம் அளப்பெரியதாகும். செல்லமான முறையில் அவர்களின் வயதுப் பிள்ளைகள் கல்வியைக் கவலையில்யாமல் தொடரும் இச்சந்தந்தர்பத்தில் இவர்களின் எதிர்கால வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதனை நினைத்துப்பார்க்கவும் முடியாமல் மனம் சஞ்சலப்படுகின்றது.

ஆகையால் இவ்வாய்வானது சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (Sammanthrai Divisional Secretariat Area) வேலைக்கமர்த்தப்பட்ட சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சிரனகள் அதற்கான காரணங்கள் என்பனவற்றை இனங்காண்பதுடன் அதற்கு நடைமுறைச்சாத்தியமான தீர்வை முன்வைக்கும் முகமாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறை**

இவ்வாய்வு பிரதானமாக முதலாம் நிலைத் தரவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 51 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் பல்வேறு துறைசார்ந்த தொழில்களில் ஈடுபடும் சிறுவர்களில் எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் (Random sampling method) 120 பேர் தெரிவு செய்யப்பட்டு நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும் சம்மாந்துறைப் பிரதேசத்தில் வளர்ச்சியடையாத 15 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து ஊழியத்தில் ஈடுபடும் 50 சதவீதமானவர்கள் (60பேர்) தெரிவு செய'யப்பட்டதுடன் ஏனைய 50 சதவீதமானவர்களும் (60பேர்) மிகுதி 36 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து வேலையில் ஈடுபடுகின்றவர்களாகும். இவர்களிடம் தேவையான விடயங்கள் பெறுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து (Structured Questionnaire) தயாரிக்கப்பட்டு அதற்கமைய தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் மற்றும் தொழில் வழங்குநர்களிடமிருந்தும் தேவையான தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வு தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறும் நோக்குடன் சம்மாந்துறை பிரதேச செயலகம், அம்பாரை கச்சேரி மற்றும் சிறுவர் நலன்புரி தினைக்களம் (UNICEF) என்பனவற்றிடமிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளும் பகுப்பாய்வுக்காக பயன்படத்தப்பட்டுள்ளன.

**சுருக்கமும் முடிவும்**

இவ்வாய்வின் முடிவிற்கிணங்க ஊழியத்தில் ஈடுபடும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இத்தகைய சிறுவர்களின் பிரச்சினையானது தொழிலின் தன்மைக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகிறமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 82 சதவீதமான இத்தகைய சிறுவர்கள் தாங்கள் சிறுவர்களாக இருப்பதனால் கொத்தடிமை போல் எல்லா வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுவதாக குறிப்பிடுகின்றனர். அதாவது முதலாளி மற்றும் சக ஊழியர்கள் கூறும் வேலைகளை அவசரமாக ஒரு இயந்திரம் போல் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர். மேலும் இவ்வாய்வின் முடிவிற்கிணங்க 12 சதவீதமானவர்கள் உடலியல் ரீதியாக பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இவர்கள் அடித்தல், கண்டித்தல் போன்ற துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். பலசரக்குக்கடை, கற்சூழை, கூலியில்லாத விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுபவர்களும் வீட்டு வேலை செய்யும் சிறுமிகளும் இவ்வாறு துன்புறுத்தப்படுகின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினை சுயமாக தொழிலில் முன்னேற்றுவதற்கு முதலாளிமார் விருப்பமின்றி செயற்படுவதாகும். குறைந்த கூலியில் தொடர்ச்சியாக இச்சிறுவர்களை வேலையில் தக்கவைத்துக்கொள்வதே இம்முதலாளிகளின் இலக்காக உள்ளது. விஷேடமாக வாகனங்கள் பழுது பார்க்கும் நிலையங்களில் வேலைபுரியும் சிறுவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். இச்சிறுவர்கள் முழுமையாக ஒரு தொழிலை சிறந்த முறையில் கற்றுக்கொள்வதற்கு இடமளிப்பதில்லை. இதனால் ஒரு தொழிலை ஒருவர் முழுமையாக கற்றுக்கொள்வதற்கு 7 அல்லது 8 வருடங்கள் தேவைப்படுகின்றன. முதலாளி மற்றும் சக ஊழியர்கள் மரியாதயற்ற முறையில் நடந்துகொள்வதனாலும் தகாத வார்த்தைகளை பிரயோகிப்பதனாலும் சிறுவர்கள் உளரீதியாக பாதிப்புக்குள்ளாவதனை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர்கள் இவ்வாறு வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்கு 90 சதவீதம் வறுமையே காரணமாக அமைவதுடன் படிப்பில் விருப்பமின்மை, கல்வி கற்க ஆர்வம் இருந்தும்

அதற்கேற்ற முறையில் கல்வி வழங்கப்படாமை, தாய் அல்லது தந்தை அல்லது தாயும் தந்தையும் வெளிநாடு சென்றமை மற்றும் சிறந்த பராமரிப்பின்மை போன்றன ஏனைய 10 சதவீத காரணங்களாகும். இதனால் இச்சிறுவர்கள் அதிகமாக பாடசாலை இடைவிலகல்களை மேற்கொள்கின்றனர். சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் அறிக்கையின்படி 15 கிராம செயலகப்பிரிவுகளில் அதிகமான இடைவிலகல்கள் இடம்பெறுவதாக குறிப்பிடுகின்றது. மேலும் இப்பிரதேசத்தில் காணப்படும் மற்றுமொரு பிரச்சினை சீதனம். அதனால் தங்கள் குடும்பத்தில் உள்ள பெண்பிள்ளைகளுக்கு வீடு கட்டி, சீதனம் வழங்கி திருமணம் முடித்துக்கொடுக்க வேண்டும் என்பதற்காக அக்குடும்பத்தில் காணப்படும் அநேக ஆண்பிள்ளைகள் சிறுபராயத்திலிருந்தே உழைக்க ஆரம்பிக்கின்றனர். இதனால் சீதனமானது இப்பிரதேசத்தில் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்கு ஒரு பிரதான பின்னணிகளில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.
ஆய்வுப்பிரதேசத்தில மேற்படி நிலையிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையில் பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய சிறுவர்கள் கல்வியையும் விட்டு விலகி வேலையில் ஈடுபடுவதற்கு பிரதான பின்புலமாக காணப்படும் 'வறுமை'யை குறைக்கும் முகமாக அரசினாலும், பிரதேச அளவிலும் வறுமை ஒழிப்புத்திட்டங்களை (Poverty alleviation program) சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.. சம்மாந்துறையில் இயங்கிவரும் மஜ்லிஸ் அஸ்ஸுறா மூலம் சமுதாயத்திற்கு வேண்டிய விழிப்புணர்வுகள் வழங்கப்படல் வேண்டும். சம்மாந்துறையில் இயங்கிவரும் சகாத் நிதியத்தின் முக்கிய இலக்கு இப்பிரதேசத்தில் ஏழை மக்களின் தொகையை இல்லாமல் செய்து அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இவ்வகையில் இந்நிதியத்தின் செயற்பாட்டை மேலும் வளப்படுத்த உரிய தரப்பினர் முன்வருவது அவசியமாகும். இப்பிரச்சினையுடன் சம்மந்தப்பட்ட சிறுவர்கள், பெற்றோர்கள், முதலாளிமார்களுக்கு தகுந்த சமய ரீதியான நல்லுரைகளை வழங்க சம்மாந்துறையில் இயங்கிவரும் உலமா சபை மற்றும் மஜ்லிஸ் அஸ்ஸுறா என்பன கூட்டாக நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

இத்தகைய வறிய குடும்பங்களின் மத்தியில் நிலவும் வறுமையைப் போக்கும் முகமாகவும், சிறுவர்களைக் கல்வியில் ஈடுபடுத்தும் முகமாகவும் சிறுவர்களுக்கு பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் கைத்தொழில்சார் கற்கை நெறிகளை போதித்தல் (பெண் சிறுமிகளுக்கு தையல் தொழில்) மற்றும் குறித்த குடும்பத்திற்கு வீட்டுப்பயிர், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்றவற்றிற்கு பொருளாதார உதவிகள் மற்றும் நன்கொடைகளை வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள விஸேடமக இப்பிரதேச அரசியல்வாதிகள் முன்வருதல் அவசியமாகும். இது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "திவிநெகும" திட்டம் வரவேற்கத்தக்கதொன்றாக காணப்படுகின்றது. மற்றும் இப்பிரதேசத்தில் யுனிசெப் (Unicef), சேவ் த சில்ரன்(Save The Children), சைல்ட் கெயா(Child Care), சிறுவர் நன்னடத்தை திணைக்களம் போன்றவற்றின் கிளை அமைப்புகளை உருவாக்கல். மற்றும் மக்கள் மத்தியில் கட்டாயக்கல்வியின் மகத்துவத்தை புரியவைத்தல் போன்ற பல நடவடிக்கைகளை அமுல்படுத்துவதும் இன்றியமையாததாகும்.

## References


Department of Census and Statistics, Ministry of Finance and Planning: (2009), Child Activity Survey 2008/2009, Department of Census and Statistics, *Child Activity Survey*, survey undertaken with the support of the ILO.

Devi,K and R. Gautam (2008), Study of Child Labor Among School Children in Urban and Rural Areas of Pondicherry, Indian Journal of Community Medicine, Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, India

Divisional Secretariat (2007), Resource Profile, Planning Division, Divisional Secretariat, Sammanthurai.

Lankapuvath (2012), "Sri Lanka: Child Abuse and Future Child", Lankapuvath (28.01.2011) Weekend Lankapuvath,